කෘෂිකර්ම අමාත්‍යාංශය

**கமத்தொழில் அமைச்சு**

**Ministry of Agriculture**

**80/5** ,"ගොවිජන මන්දිරය", රජමල්වත්ත පටුමග, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
80/5, "கொவிஜன மந்திரய",ரஜமல்வத்தை ஒழுங்கை,பத்தரமுல்லை, இலங்கை.
80/5 ,"Govijana Mandiraya", Rajamalwatta Lane, Battaramulla, Sri Lanka.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය.<br>எனது இல.<br>My No. | Fert/Dev/3/08/26-2024 යල මාර්ගෝපදේශය | ඔබේ අංකය.<br>உமது இல.<br>Your No. | | දිනය.<br>திகதி.<br>Date. | 2024.03.28 |

## அமைச்சரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல்

## 2024 சிறுபோகத்திற்கு வயல் காணிகளில் நெல்லைப் பயிரிடும் விவசாயிகளுக்கு நிதி நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத் திட்டம் பற்றிய வழிகாட்டி

### 1. நிவாரணக் கொள்கை

1.1 "2024 சிறுபோகத்திற்கு வயல் காணிகளில் நெல்லைப் பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு உர மானியத்தைப் பெற்றுக் கொடுத்தல்" என்ற தலைப்பில் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்துள்ள 24/0498/612/027 ஆம் இலக்க 2024.03.05 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2024.03.18 ஆம் திகதி கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம், 2024 சிறுபோகத்தினுள் வயல் காணிகளில் நெல்லைப் பயிரிடுகின்ற விவசாயி ஒருவருக்கு பயிரிடப்படுகின்ற அளவு ஆகக்கூடியது 02 ஹெக்டேயர் என்ற அடிப்படையில் ஹெக்டேயர் ஒன்றுக்கு 15,000/- ரூபா வீத நிதி நிவாரணம் ஒன்றை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் பெற்றுக் கொடுப்பதற்கும் மற்றும் அந்த நிதி நிவாரணத்தை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வரவு வைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1.2 அதன்படி, 2024 சிறுபோகத்தில், விவசாயிக்கு சொந்தமாக தீவின் எந்த ஒரு பிரதேசத்திலும் அல்லது பிரதேசங்களிலும் அமைந்திருக்கின்ற நெல் பயிரிடப்படும் வயல் காணியின் அளவு ஆகக்கூடியது 02 ஹெக்டேர்கள் என்ற அடிப்படையில் 01 ஹெக்டேருக்கு ரூ.15,000/- வீதம் 02 ஹெக்டேயர் வரை ஆகக்கூடியது ரூ.30,000/ - தொகையை ஒரு விவசாயி பெற்றுக் கொள்ளும் வகையில் அந்த விவசாயிக்கு ஒரு நிதி நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்து கிடைத்துள்ளது. இந்த நிதித் தொகையை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வரவு வைக்கும் பொறுப்பு கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ලේකම් දුරකථන தொலைபேசி Telephone - 011-2034340 | කාර්යාලය දුරකථන தொலைபேசி Telephone - 011-2034300
செயலாளர் ඊ-මේල් மின்னஞ்சல் e- mail - secretary@agrimin.gov.lk | அலுவலகம் ඊ-මේල් மின்னஞ்சல் e- mail - info@agrimin.gov.lk
Secretary ෆැක්ස් தொலைநகல்° Fax - 011-2863497 | Office ෆැක්ස් தொலைநகல் Fax - 011-2868910

## 2. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறுப்பும் மற்றும் கடமைப் பணிகளும்

2.1 அமைச்சரவை வழங்கியுள்ள தீர்மானத்தின் பிரகாரம், 01 ஹெக்டேருக்காக, ஒரு போகத்திற்கு ரூ.15,000/- வீதம் ஆகக்கூடியது 02 ஹெக்டேயர்கள் வரை ரூ.30,000/- தொகை ஒன்று கிடைக்கும் வகையில், ஒரு விவசாயினால் பயிரிடப்படுகின்ற வயல் காணியின் அளவுக்கு ஏற்ப கிடைக்க வேண்டிய நிதி நிவாரணத்தைக் கணிப்பிட்டு குறித்த பணத் தொகையை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வரவு வைக்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் தாமதியாது சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். வயல் காணி அளவுக்கு ஏற்ப நிதி நிவாரணத்தை கணிப்பிட வேண்டிய முறை தொடர்பான விபரங்கள் இணைக்கப்பட்டுள்ளன (பின்னிணைப்பு I)

2.2 இதில், விவசாயி ஒருவரின் தேசிய அடையாள அட்டையின் கீழ் அந்த நபரின் பெயரில் அல்லது அந்த விவசாயியால் எழுத்தில் பெயர்குறிக்கப்படும் வங்கிக் கணக்கில் அல்லது பல வங்கிக் கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படுவதால் ஏற்படக்கூடிய இரு தடவைகள் அல்லது பல தடவைகள் கணிப்பிடப்பட்டு விவசாயி ஒருவருக்கு அதிக பணம் வரவு வைக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்ளும் முகமாக தேவையான உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். நிவாரணத் தொகைக்கு விண்ணப்பிக்கும் நபரின் சரியான ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள தேவையான பொருத்தமான நடவடிக்கையை கமநல அபிவிருத்தித் திணைக்களம் எடுக்க வேண்டும்.

2.3 விவசாயிகள் உரத்தை  கொள்வனவு செய்வதற்கான உரிய மானியத் தொகையை அந்தந்த விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்ப வேண்டும். எவரேனும் விவசாயி ஒருவருக்கு 2024 சிறுபோகத்திற்கு உரிய தொகை அனுப்பப்படும் போது, உரிய விவசாயியின் பெயரில் துல்லியமாக இயங்கும் ஒரு வங்கிக் கணக்கு இல்லாவிட்டால் உரிய விவசாயியால் எழுத்தில் பெயர்குறிக்கப்படும் ஒரு வங்கிக் கணக்கிற்கு அந்த தொகையை அனுப்பி, உரிய விவசாயி தனது நெற் பயிருக்கு தேவையான உரத்தை கொள்வனவு செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். ஆயினும், உரிய விவசாயி தனது பெயரில் ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பித்து அந்த வங்கிக் கணக்கை பேண முடியாதிருப்பின், அது பற்றி தேடிப்பார்த்து உரிய வங்கிகளுடனும் மற்றும் ஏனைய நிறுவனங்களுடனும் தொடர்புகொண்டு அதற்கு தேவையான தீர்வைப் பெற்றுக் கொடுத்து, அந்த விவசாயியின் பெயரிலேயே ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பிக்கச்செய்து அந்த வங்கிக் கணக்கை துல்லியமாக பேணிச்செல்ல ஊக்குவிப்பதும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் வழிகாட்டுவதும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

2.4 கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் இந்த வேலைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்படும் தொகையிலிருந்து உரிய விவசாயிகளினால் கொள்வனவு செய்யப்படும் உரங்கள் அந்த விவசாயிகளினால் அவர்களின் நெற் பயிர்களுக்கு இடப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வேலைத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். காணி உரித்தற்ற எவரேனும் விவசாயி இருப்பராயின் அவர் வயல் காணிகளில் நெல்லைப் பயிரிடும் சந்தர்ப்பத்தில்  (உ+ம்:- குத்தகை விவசாயி, பயிர்போக மாற்று விவசாயி முதலியன போன்ற நெல் வயல் காணிகளின் பயிர்ச்செய்கையின் போது பயன்படுத்தப்படும் முறை) உரிய பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயினது வங்கிக் கணக்குக்கு உரிய உர நிவாரணத் தொகையை அனுப்பி அந்த விவசாயிக்கு அவரின் நெற் பயிருக்கான உரம்

சரியாக கிடைக்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதும் இந்த கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

2.5 நெல் வயல்களில் நெல்லைப் பயிரிடும் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை அனுப்புவதற்கான ஒரு கால வரையறையை நிர்ணயித்து, அந்த கால வறையறைக்கு ஏற்ப, பொதுத் திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய நிதியின் அளவுகள் பற்றி நேர காலத்தோடு கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவிப்பது கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் பொறுப்பாகும்.

2.6 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு குறித்த பணத் தொகையை அனுப்பி வைக்கும் போது மிகவும் வசதியாகவும் மற்றும் வினைத் திறன் வாய்ந்ததாகவும் திறைசேரியினது காசுப் பாய்ச்சலை (Cash Flow Management of the Treasury) முகாமை செய்யக் கூடியவாறு அந்தந்தப் பிரதேசங்களின் பயிரிடும் கால அட்டவணைக்கு இணங்க, உரிய பயிர்ச்செய்கை போகத்தில் அந்தந்த மாதங்களுக்கு உரிய மாதாந்த வசக்கட்டுநிதியின் தேவையை கமநல சேவைகள் திணைக்களத்தினதும், கமத்தொழில் அமைச்சினதும் உரிய சிபரிரிசுகளுடன் திறைசேரியின் செயற்பாடுத் திணைக்களத்திற்கு ஆகக்குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னராவது அறிவித்து குறித்த அந்தத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதும் கமநல ஆணையாளர் நாயகத்தின் பொறுப்பாகும்.

2.7 நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு உரத்தை கொள்வனவு செய்யும் முகமாக நிதி மானியத்தை வழங்குவதில், 2023/24 பெரும்போகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட முறையிலிருந்து பெற்ற அனுபவத்தின் அடிப்படையில், நிலவுகின்ற குறைபாடுகளையும் மற்றும் முறைகேடுகளையும் தவிர்க்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு கமநல அபிவிருத்தித் திணைக்களம் விரைவில் ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். இம்முறை 2024 சிறுபோகத்தில் நெல்லைப் பயிரிடும் விவசாயிகள் நிதி மானியத்திற்காக விண்ணப்பிப்பது முதல் அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பணம் செலுத்துவது வரையான ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்துவது பற்றி தனது திணைக்களத்தின் ஊழியர்களுக்கு தேவையான சுற்றறிக்கைகளையும், கட்டளைகளையும், விதிமுறைகளையும் மற்றும் வழிகாட்டல்களையும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் வெளியிடுதல் வேண்டும்.

2.8 நன்மைபெறும் விவசாயிகளின் தகவல் தரவுத்தள முறைமையை இற்றைப்படுத்தி அதனை பேணிச்செல்ல வேண்டும். நிதி மானியத்தைப் பெறத் தகுதியுடைய விவசாயிகள் மற்றும் அவர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகை பற்றிய விபரங்களை தரவுத்தள முறைமை ஊடாக சரிபார்க்கக்கூடியவாறு பொது மக்களுக்கு அவகாசம் வழங்க வேண்டும்.

2.9 நிதி மானியத்திற்கு விண்ணப்பித்ததன் பின்னர், அந்தந்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மேன்முறையீடுகளை செய்வதற்கும், அந்த மேல்முறையீடுகளை விரைவாக விசாரித்து எடுக்கப்படும் தீர்மானத்தை மேன்முறையீடு செய்பவருக்கு காரணங்களுடன் அறிவிக்கும் பொருட்டு உரிய ஒரு முறையியலை அறிமுகப்படுத்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

2.10 போலியான ஆவணங்களின் அடிப்படையில் மானியங்கள் மோசடியாகப் பெறப்பட்டாலும், அவ்வாறு செய்யப்பட்டுள்ளமை தெரியவந்தாலும் அதற்காகப் பொறுப்புக்கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மோசடியாகப் பெறப்பட்டதாக

உறுதிசெய்யப்பட்ட நிதி மானியத் தொகைகளை விரைவில் அரசாங்கத்திற்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டும்.

2.11 விவசாயிகளுக்கு பணத் தொகையை அனுப்பிய பின்னர், அவர்கள் நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளாவிட்டால், பொது நிதி தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு உகந்த ஒரு வேலைத் திட்டத்தை செயற்படுத்தி அந்த நிதி நிவாரணத் தொகையை குறித்த ஒரு காலப் பகுதியினுள் மீளறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தகைய ஒரு வயல் காணிக்கு அடுத்த 02 பயிர்ச்செய்கைப் போகங்களுக்கு எந்த ஒரு நிவாரணத்திற்கும் உரிமை கோர முடியாத வகையில் கறுப்புப்பட்டியலில் சேர்த்து உரிய விபரங்களை பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2.12 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை செலுத்த வங்கிகளைத் தேர்ந்தெடுக்கும் போது, ஒரு சில அரச வங்கிகளை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும். உரிய வங்கியின் மூலம் விவசாயியின் வங்கிக் கணக்குக்கு பணம் அனுப்பட்டமை பற்றி குறுங்செய்தியின் ஊடாக அறிவிக்கும் வசதிகளையும் மற்றும் வலையமைப்பு வசதிகளையும் உடைய வங்கிகளை தேர்ந்துப்பது முக்கியம். இதன் போது இதற்கு முன்னர் உரங்களைப் பெற்றுக் கொள்ளும் முகமாக விவசாயிகளுக்கு நிதி நிவாரணம் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில் பயன்படுத்திய வங்கிகளின் பரிட்சயத்தையும் அனுபவத்தையும் இந்த சந்தர்ப்பதிலும் பொருத்தமானவாறு பயன்படுத்துவது உகந்ததாகும். நன்மைபெறும் விவசாயி ஒருவரின் வங்கிக் கணக்குக்கு உரிய வங்கியினால் நிவாரணத் தொகை விடுவிக்கப்பட்டவுடன் அது பற்றி அந்த விவசாயிக்கு அறிவிக்கும் பொருட்டு உகந்த ஒரு முறையியலை உரிய வங்கிகளுடன் கலந்துரையாடி அறிமுகப்படுத்தவும் கமநல அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.13 கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் உர நிதி நிவாரணத்தை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பது தொடர்பாக செயற்படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டத்தையும் அதன் முன்னேற்றத்தையும் தொடர்ச்சியாக அறிக்கையிடுவதற்கு மிகவும் வினைத்திறன் வாய்ந்த ஒரு வேலைத் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வாரத்திலும் வெள்ளிக்கிழமை தினத்திற்கான முன்னேற்றத்தை அடுத்து வரும் திங்கட்கிழமை நாளில் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2.14 மேலும், விவசாயிகளுக்கு உரத்தை கொள்வனவு செய்யும் முகமாக நிதி நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு முறையியலை செயற்படுத்தும் போது கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், தனது திணைக்களத்தின் ஊழியர்களுக்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், கட்டளைகள், விதிமுறைகள் அல்லது எழுத்திலான வழிகாட்டல்கள் அடங்கிய ஆவணங்களின் பிரதிகளை அமைச்சின் செயலாளருக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

## 3. <u>தேசிய உர செயலகத்தின் பொறுப்புகளும் மற்றும் கடமைகளும்</u>

3.1. நிதி மானியம் பெறுகின்ற நெல் விவசாயிகளுக்கு எந்த விதமான பற்றாக்குறையும் இன்றி உரிய தரத்திலான உரங்களை திறந்த சந்தையில் கௌ்வனவு செய்யக் கூடிய வகையில் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்து ஒரு வேலைத் திட்டத்தை தயாரித்து அது பற்றி அமைச்சின் செயலாளருக்கும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் அறியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சந்தையில் தரமான உரங்கள் சுலபமாக கிடைப்பது தொடர்பாக ஒரு விஷேட கவனத்தை செலுத்தும் பொருட்டு தேசிய உர செயலக அலுவலகம், அதன் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து பரந்தளவான ஒரு கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். உரங்கள் சுலபமாக கிடைப்பதில் ஏதாவது ஒரு

பிரச்சினை இருக்குமாயின், அதனை நேர காலத்தோடு கண்றிந்து அதன் நிமித்தம் எடுக்க வேண்டிய தீர்வுகள் பற்றி விரைவில் அமைச்சின் செயலாளருக்கு அறிவிப்பதற்கு தேசிய உர செயலகத்தின் பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.2. உரத்தைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கு நிதி நிவாரணம் வழங்கப்படுகின்ற போது தேசிய உர செயலகத்தினதும் அதன் மாவட்ட அலுவலகங்களினதும் உத்தியோகத்தர்களின் அனுபவம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் கோரப்படும் சந்தர்ப்பங்களில் அத்தகைய அனுபவத்தை பெற்றுக் கொடுக்கவும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து தேசிய உர செயலகத்தின் மாவட்ட அலுவலகங்களினது நல்ல பங்கேற்புடன் 2024 சிறுபோகத்திற்கு உரிய நிதியைப் பெற்றுக் கொடுக்கின்ற நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்படுதலும் வேண்டும்.

## 4. <u>விவசாயிகளின் கணக்குகளுக்கு பணம் அனுப்பும் வங்கிகளின் பொறுப்புப் பணிகள்</u>

4.1. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால், உரிய முறையில் விடுக்கப்படும் வேண்டுகோள் அடிப்படையில், கமத்தொழில் அமைச்சினால் கமனநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குக்கு வரவு வைக்கப்படும் பணத்தை, கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அறிவுரை பிரகாரம் சரியான முறையில் விரைவாக விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்ப தேவையான ஒரு வேலைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

4.2. கமநல அபிவிருத்தித் திணைக்களத்திலிருந்து உரிய அறிவுரைகள் வங்கிக்கு கிடைத்தவுடனே விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நிவாரணத் தொகையை விரைவில் அனுப்பி வைக்க வங்கி நடடிவக்கையை எடுக்க வேண்டும். விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு பணம் அனுப்பப்பட்டவுடன் உடனடியாக உரிய வங்கியின் மூலம், உரத்தை கொள்வனவு செய்வதற்கு உரிய நிவாரணத் தொகை உரிய விவசாயியின் வங்கிக் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டமை மற்றும் குறித்த பணத் தொகை எவ்வளவு என்பன போன்ற விபரங்கள் அடங்கிய ஒரு குறுங்-செய்தி சேவையை (SMS) அல்லது பொருத்தமான வேறு ஏதாவது ஒரு முறையியலை பின்பற்றி விவசாயிக்கு அறியப்படுத்தும் முகமாக உகந்த ஒரு வேலைத் திட்டம் வங்கியின் மூலம் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

## 5. <u>விவசாயத் திணைக்களத்தின் பொறுப்புப் பணிகள்</u>

5.1. உரிய தரத்திலான உரங்களை (Right source) உரிய காலத்திற்கு (Right time) உரிய அளவில் (Right amount) உரிய விதத்தில் (Right place) இடும் வகையில் விவசாயிகளுக்கு விழிப்பூட்டும் முகமாக உரிய நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு விவசாய விரிவாக்கல் சேவைகள் பிரிவினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். ஒன்றிணைந்த தாவரங்கள் போஷனை முறையியலை பின்பற்றுவதில் உள்ள முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டி வினைத் திறனை மேம்படுத்தும் முகமாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும்.

5.2. மண்ணின் வளத்தையும் மற்றும் மண்ணின் இயல்பையும் பாதுகாத்து, உரங்களை இடுவதால் ஏற்படக்கூடிய சுற்றாடல் பாதிப்புகளை தவிர்த்துக் கொள்ளும் முகமாக மண் பரிசோதனை, தாவர நிற சுட்டிகள் என்பவற்றை பயன்படுத்தும் பொருட்டு விவசாயிகளை ஊக்குவிப்பதன் ஊடாக, உரம் அதிகளவில் பாவிக்கப்படுவதையும் தகாத முறையில் பாவிக்கப்படுவதையும்

தவிர்க்கும் பொருட்டு உரிய நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு சரியான பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தரமான, வினைத் திறன் வாய்ந்த, தரத்தில் உயர்ந்த சரியான உர வகைகள், சிபாரிசுகள் என்பவற்றின் இற்றைப்படுத்திய தகவல்களை விவசாயிகளுக்கு வழங்கி அவர்களை விழிப்பூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 6. <u>விவசாய திணைக்களம், மாகாண விவசாய திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபை ஆகியவற்றின் பொறுப்புப் பணிகள்</u>

6.1. உரங்களின் வினைத் திறன் மேம்பாடு, ஒன்றிணைந்த தாவரங்கள் போஷனை, மண் வளம் ஆகியவற்றை பேணுதல், மண்ணின் உகந்த தன்மை போன்ற விவசாயிகளை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிட்டு அவற்றின் நிமித்தம் விவசாயிகளை குறிப்பீடு செய்ய உரிய நிறுவனங்கள் செயற்படுத்தும் வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி ஒவ்வொரு வாரத்திலும் இரண்டு தடவைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிக்கையிடுதல்.

## 7. <u>கமத்தொழில் அமைச்சின் பொறுப்புப் பணிகள்</u>

7.1. கமநல சேவைகள் திணைக்களத்தினால் உரிய முறையில் விடுக்கப்படும் வேண்டுகோளின் பிரகாரம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை அனுப்பி வைக்கக் கூடியவாறு கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு நிதியை வழங்கும் முகமாக பொதுத் திறைசேரியுடன் இணைந்து தொழிற்படுதல்.

7.2. இந்த வேலைத் திட்டங்களின் அனைத்து விடயங்களையும் முழுமையான கண்காணிப்பில் செயற்படுத்த கமத்தொழில் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு செய்ய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினதும், விவசாயத் திணைக்களத்தினதும், இலங்கை மகாவலி அதிகார சபையினதும், தேசிய உர செயலகத்தினதும், சகல மாவட்ட செயலாளர் அலுவலகங்களினதும் மற்றும் இந்த வேலைத் திட்டத்தை செயற்படுத்தும் போது முக்கியமாக பங்குகொள்ளும் ஏனைய அரச நிறுவனங்களினதும், அரை அரச நிறுவனங்களினதும் மற்றும் அரச மற்றும் தனியார் துறை உரக் கூட்டுத் தாபனங்களினதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் அவசியமாகும். எனவே விவசாயிகளுக்கு உரிய கால நேரத்திற்கு உரிய தரமான உரத்தையும் மற்றும் உரிய அளவுகளையும் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் சந்தையில் உரங்கள் சுலபமாக கிடைக்கச்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டு, ஏதாவது பிரச்சினைக்குரிய நிலைமைகள் அல்லது தனது அதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள் தீர்க்க முடியாத கடினமான ஏதாவது விடயங்கள் இருக்குமாயின் தாமதியாது உடனடியாக அவை பற்றி கமத்தொழில் அமைச்சுக்கு அறியப்படுத்தி, அவற்றுக்கு தேவையான தீர்வுகளை விரைவாக பெற்றுக் கொடுத்து விவசாயிகளுக்கு இடையில் உரம் சந்தமான பிரச்சினைகள் ஏற்படாதவாறு நடவடிக்கையை எடுத்து நாட்டினது உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களுக்கு தேவையான உகந்த ஒத்துழைப்பை கமத்தொழில் அமைச்சுக்கு வழங்குவது சகல நிறுவனங்களினதும் மற்றும் ஊழியர்களினதும் பொறுப்பும் கடமையும் என கருதி செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

## 8. <u>மேற்பார்வை</u>

8.1. நிதி நிவாரணத்தை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுத்தல் மற்றும் விவசாயிகளினால் தமது நெற் பயிர்களுக்கு உரங்கள் இடப்படுதல் ஆகிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நெருங்கியவாறு

மேற்பார்வை செய்ய வலிமையான ஒரு வேலைத் திட்டம் உரிய மாவட்ட செயலாளர்களின் பங்கேற்பில், மாவட்ட உர ஒருங்கிணைப்பு உப குழுவினால் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

8.2. தனது மாவட்டத்தின் நிதி நிவாரண விடயங்களை கமநல சேவை நிலைய மட்டத்தில் உரிய முறையில் மேற்பார்வை செய்து அந்த விடயங்களுக்கு உரிய முறையில் வழிகாட்டுவது சகல மாவட்டப் பொறுப்பு கமநல பிரதி ஆணையாளர்களின் / உதவி ஆணையாளர்களின் நேரடிப் பொறுப்பாகும்.

8.3. தேசிய உர செயலகம் மாவட்டத்திற்கு என நியமித்துள்ள உதவிப் பணிப்பாளர்களால் உரிய அந்தந்த மாவட்டங்களினுள் உரங்களின் தரத்தையும் மற்றும் உரங்கள் சந்தையில் சுலபமாக கிடைப்பதையும் ஆராய்ந்து பார்த்து தேவையான பிரிவுகளுக்கு அறியப்படுத்தி விவசாயிகள் பற்றாக்குறையின்றி உரிய தரமான உரங்களை கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பளிப்பதும் இவர்களின் பொறுப்பாகும்.

8.4. தனது அதிகாரப் பிரதேசத்திற்கான நிதி நிவாரணத்தை வழங்க உரிய சகல விடயங்களையும் இந்த வழிகாட்டலில் தரப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு இணங்க மேற்பார்வை செய்வது சகல பிரதேச செயலாளர்களினதும் பொறுப்பாகும். அந்த விடயங்கள் தொடர்பான முன்னேற்றமும் பிரதேச விவசாயக் குழுக் கூட்டங்களின் போது விரிவாக மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

8.5. உரத்தை கொள்வனவு செய்வதற்கான நிதி மானியம் வழங்கப்படுவதை மாவட்ட மட்டத்தில் மேற்பார்வை செய்து, முன்னேற்றம் தொடர்பான கூட்டங்களை மாவட்ட செயலாளர்களின் தலைமையில் நடத்தி அந்தந்த மாவட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் அடங்கிய ஒரு அறிக்கையை ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை மாவட்ட செயலாளர்கள் ஊடாக கமத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்க உரிய மாவட்டத்திற்கான கமநல சேவை ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்ட ரீதியாக தயாரித்த மொத்த முன்னேற்ற அறிக்கையை கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் செயலாளருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

இந்த வழிகாட்டலில் தரப்பட்டுள்ள அறிவுரைகள், மட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றை நன்றாக புரிந்து கொள்ளுமாறும், தேவையான விளக்கங்களை அனைத்து உரிய உத்தியோகத்தர்களுக்கு அளிக்குமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பணத்தை தகாத முறையில் பெற்றுக் கொள்வது அல்லது பயன்படுத்துவது அல்லது அத்தகைய செயல்களுக்கு உதவுவது சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றம் என்பதால் உரிய சகல தரப்புகளுக்கும் இது பற்றி தெரியப்படுத்தி, அத்தகைய செயல்கள் நிகழக்கூடிய சாத்தியத்தை தவிர்க்கும் முகமாக தேவையான உள்ளக பரிசீலனைகளை நடத்தி நிருவாக விதிமுறைகளை செயற்படுத்துவது அனைத்து அதிகாரிகளினதும் பொறுப்பு என்பதையும் அறியத் தருகின்றேன். மேலும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் உள்ள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பங்களிப்புடன் ஒரு நிலையான கணக்காய்வை மேற்கொள்ள பொருத்தமான ஒரு வேலைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்பதையும் மேலும் அறியத் தருகின்றேன்.

அமைச்சரவையின் குறித்த தீர்மானத்தை செயற்படுத்தி (2024 சிறுபோகத்தில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு நிதி நிவாரணத்தை வழங்கல்) குறித்த நிகழ்ச்சி திட்டத்தால் எதிர்பார்க்கும் விவசாய, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல் என்பன போன்ற குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு இந்த வழிகாட்டலில் தரப்பட்டுள்ள அறிவுரைகளின் பிரகாரம் செயற்பட்டு நீங்கள் நல்கும் ஒத்துழைப்பை பெரிதும் மதிக்க கடமைப்பட்டுள்ளேன்.

ஜானக தர்மகீர்த்தி
செயலாளர்
கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**பிரதிகள்:-**

1) ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதி செயலகம்
2) பிரதமரின் செயலாளர், பிரதமர் செயலகம்
3) கணக்காய்வாளர் நாயகம்
4) செயலாளர், நிதி அமைச்சு
5) செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு
6) செயலாளர், நீர்ப்பாசன அமைச்சு
7) மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் யாவரும்
8) மாவட்ட செயலாளர்கள் யாவரும்
9) பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
10) பணிப்பாளர் நாயகம், அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம்
11) பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம்
12) கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம்
13) பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகார சபை
14) பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
15) மேலதிக செயலாளர்கள் / பணிப்பாளர் நாயகங்கள் யாவரும், கமத்தொழில் அமைச்சு
16) பிரதான நிதி அதிகாரி, கமத்தொழில் அமைச்சு
17) பணிப்பாளர், தேசிய உர செயலக அலுவலகம்
18) தலைவர், இலங்கை உரக் கூட்டுத் தாபனம் / கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத் தாபனம்
19) தலைவர், விவசாய கமநல காப்புறுதி சபை
20) இந்த வேலைத் திட்டத்திற்கு பங்களிக்கும் வங்கிகளின் தலைவர்கள்
21) பிரதான உள்ளகக் கண்ககாய்வாளர் (உரம்), கமத்தொழில் அமைச்சு

**<u>பின்னிணைப்பு 1</u>**

| வயல் காணியின் அளவு (x) (ஏக்கர் / ஹெக்டேயர்) | 2024 சிறுபோகத்திற்கு கிடைக்க வேண்டிய நிவாரணத் தொகை (ரூ.) |
|---|---|
| 1/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.00 < x ≤ 0.10 ) | 1,500.00 |
| 1/4 ஏக்கருக்கு அதிகம் 1/2 ஏக்கர் வரை (ஹெக்டேயர3 0.1 < x ≤ 0.20 ) | 3,000.00 |
| 1/2 ஏக்கருக்கு அதிகம் 3/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.20 < x ≤ 0.30 ) | 4,500.00 |
| 3/4 ஏக்கருக்கு அதிகம் 1 ஏக்கர் (ஹெக்டேயர் 0.30 < x ≤ 0.40 ) | 6,000.00 |
| 1 ஏக்கருக்கு அதிகம் 1 1/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.40 < x ≤ 0.50 ) | 7,500.00 |
| 1 1/4 ஏக்கருக்கு அதிகம் 1 1/2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.50 < x ≤ 0.60 ) | 9,000.00 |
| 1 1/2 ஏக்கருக்கு அதிகம் 1 3/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.60 < x ≤ 0.70 ) | 10,500.00 |
| 1 3/4 ஏக்கருக்கு அதிகம் 2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.70 <x ≤ 0.80 ) | 12,000.00 |
| 2 ஏக்கருக்கு அதிகம் 2 1/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.80 < x ≤ 0.90 ) | 13,500.00 |
| 2 1/4 ஏக்கருக்கு அதிகம் 2 1/2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 0.90 < x ≤ 1.00) | 15,000.00 |
| 2 1/2 ஏக்கருக்கு அதிகம் 2 3/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.00 < x ≤ 1.10) | 16,500.00 |
| 2 3/4 ஏக்கருக்கு அதிகம் 3 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.10 < x ≤ 1.20) | 18,000.00 |
| 3 ஏக்கருக்கு அதிகம் 3 1/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.20 < x ≤ 1.30) | 19,500.00 |
| 3 1/4 ஏக்கருக்கு அதிகம் 3 1/2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.30 < x ≤ 1.40) | 21,000.00 |
| 3 1/2 ஏக்கருக்கு அதிகம் 3 3/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.40 < x ≤ 1.50) | 22,500.00 |
| 3 3/4 ஏக்கருக்கு அதிகம் 4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.50 < x ≤ 1.60) | 24,000.00 |
| 4 ஏக்கருக்கு அதிகம் 4 1/4 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.60 < x ≤ 1.70) | 25,500.00 |
| 4 1/4 ஏக்கருக்கு அதிகம் 4 1/2 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.70 < x ≤ 1.80) | 27,000.00 |
| 4 1/2 ஏக்கருக்கு அதிகம் 5 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.80 < x ≤ 1.90) | 28,500.00 |
| 4 3/4 ஏக்கருக்கு அதிகம் 5 ஏக்கர் வரை (ஹெக்டேயர் 1.90 < x ≤ 2.00) | 30,000.00 |